මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/NSLE/103/DMD/09/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025-12-20

**வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 08/2025(i)**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செளலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்த சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கு 2025.12.05 ஆந் திகதிய 08/2025 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை மூலம் முன்மொழியப்பட்ட வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தில் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மிகவும் திறமையாகவும் திறம்படவும் செயற்படுத்துவதற்காக, புதிய சேர்த்தல்கள், தெளிவுபடுத்தல்கள் மற்றும் திருத்தங்களை உள்ளடக்கி இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02. அதன்படி, 08/2025 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் தொடர் இல. 3, 5, 6, 7, 9, 11, 12 மற்றும் 14 என்பன பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| **08/2025 சுற்றறிக்கை நிரலின் தொடர் இல.** | **உத்தேச முன்மொழிவு** | **கொடுப்பனவு** |
|---|---|---|
| 3 | மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக வீடுகளை இழந்த அல்லது வீடுகள் முழுமையாக சேதமடைந்து தமது நிரந்தர வாழ்வாதார நடவடிக்கைகளைத் தொடர முடியாத குடும்பங்களுக்கு **அதிகபட்சமாக 03 மாதங்களுக்கு** மாதாந்த கொடுப்பனவு வழங்கல். | 02 அல்லது அதற்குக் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்திற்கு ரூ. 25,000/- உதவித்தொகை<br><br>02 உறுப்பினர்களுக்கு மேலுள்ள குடும்பத்திற்கு ரூ. 50,000/- உதவித்தொகை |

| 08/2025 சுற்றறிக்கை நிரலின் தொடர் இல. | உத்தேச முன்மொழிவு | கொடுப்பனவு |
|---|---|---|
| 5 | அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட **நெல், தானியங்கள், சோளம், வேர்க்கடலை மற்றும் களப் பயிர்** நிலங்களின் பயிர் சேதம் அல்லது மீள் நடுகைக்கான ஒரு முறை மாத்திரம் வழங்கும் இழப்பீடு. | ஹெக்டேயருக்கு ரூ. 150,000/- |
| 6 | **காய்கறி, மிளகாய், வெங்காயம் மற்றும் வாழைப்பழம், பப்பாளி மற்றும் அன்னாசி போன்ற பழப் பயிர்கள்** போன்ற அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பயிர்களின் பயிர் சேதம் அல்லது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பயிர்களின் மீள் நடுகைக்கு ஒரு முறை மானியம். | ஹெக்டேயருக்கு ரூ. 200,000/- |
| 7 | அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கால்நடை பண்ணைகளில் இறந்த விலங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வழங்கப்படும் கொடுப்பனவு (பதிவுசெய்யப்பட்ட பண்ணை உரிமையாளர்களுக்கு மட்டும்). | |
| | 7.1 (அ) கால்நடை வளர்ப்பு - கலப்பின | இறந்த விலங்கு ஒன்றுக்கு ரூ. 200,000/- அதிகபட்சம் 10 விலங்குகள் வரை (அதிகபட்ச இழப்பீடு ரூ. 2,000,000/-) |
| | 7.1 (ஆ) கால்நடை வளர்ப்பு - உள்ளூர் | இறந்த விலங்கு ஒன்றுக்கு ரூ. 50,000/- அதிகபட்சம் 20 விலங்குகள் வரை (அதிகபட்ச இழப்பீடு ரூ. 1,000,000/-) |
| | *7.1 (அ) மற்றும் 7.1 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வகை விலங்குகளையும் கொண்ட பண்ணைக்கு அதிகபட்சக் கொடுப்பனவு ரூ. 2,000,000/- ஆகும்.* | |
| | 7.2 பன்றி வளர்ப்பு | இறந்த விலங்கு ஒன்றுக்கு ரூ. 20,000/- அதிகபட்சம் 20 விலங்குகள் வரை (அதிகபட்ச இழப்பீடு ரூ. 400,000/-) |
| | 7.3 ஆடு/செம்மறி ஆடு வளர்ப்பு | இறந்த விலங்கு ஒன்றுக்கு ரூ. 20,000/- அதிகபட்சம் 20 விலங்குகள் வரை (அதிகபட்ச இழப்பீடு ரூ. 400,000/-) |
| | 7.4 (அ) கோழி வளர்ப்பு - லேயர் | இறந்த விலங்கு ஒன்றுக்கு ரூ. 500/- என்ற வகையில் அதிகபட்ச கொடுப்பனவு ரூ. 1,000,000/- வரை |
| | 7.4 (ஆ) கோழி வளர்ப்பு - பொய்லர் | இறந்த விலங்கு ஒன்றுக்கு ரூ. 250/- என்ற வகையில் அதிகபட்ச கொடுப்பனவு ரூ. 1,000,000/- வரை |
| | *7.4 (அ), 7.4 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வகை விலங்குகளையும் கொண்ட பண்ணைக்கு அதிகபட்ச கட்டணம் ரூ. 1,000,000/- ஆகும்.* | |

| 08/2025 சுற்றறிக்கை நிரலின் தொடர் இல. | | உத்தேச முன்மொழிவு | கொடுப்பனவு |
|---|---|---|---|
| | 7.5 | வீட்டுக் கோழி வளர்ப்பு | அலகொன்றுக்கு ஒரு முறை வழங்கும் கொடுப்பனவு ரூ. 10,000/- |
| 9 | அனர்த்தத்தினால் சேதமடைந்த மீன்பிடித் தொழிலை மீண்டும் கட்டியெழுப்புதல். | | |
| | 9.1 | அனர்த்தத்தினால் சேதமடைந்த உவர் நீர் மீன்பிடித் தொழிலில் பயன்படுத்தப்படும் படகுகள் மற்றும் வலைகளுக்கு நிவாரணம் வழங்குதல். | |
| | | முழுமையாக சேதமடைந்த மீன்பிடி படகுகள் | சேதமடைந்த மீன்பிடி படகுக்கு பெறப்பட்ட காப்புறுதி இழப்பீட்டை சீனோர் நிறுவனத்திற்குச் செலுத்துவதற்குட்பட்டு, அந்நிறுவனத்தின் மூலம் புதிய படகு வழங்குதல் |
| | | பகுதியளவு சேதமடைந்த மீன்பிடி படகுகள் | சீனோர் நிறுவனத்தின் மூலம் பழுதுபார்த்து வழங்குதல் |
| | | அனர்த்தம் காரணமாக வலைகளை இழந்த மீனவர்களுக்கு வலைகளை கொள்வனவு செய்வதற்காக நோர்த் சீ லிமிடெட் ஒரு முறை வழங்கும் கொடுப்பனவு | ஒரு மீனவருக்கு ரூ.100,000/- மதிப்புள்ள கூப்பன் பத்திரம் |
| | 9.2 | அனர்த்தத்தினால் சேதமடைந்த குளங்களில் நன்னீர் மீன்பிடியில் பயன்படுத்தப்படும் சிறிய படகுகள் மற்றும் வலைகளுக்கான கொடுப்பனவு. | |
| | | முழுமையாக சேதமடைந்த படகு | ஒரு மீனவருக்கு ஒரு முறை உதவித்தொகை ரூ.100,000/- |
| | | பகுதியளவு சேதமடைந்த படகு | சீனோர் நிறுவனத்தின் மூலம் பழுதுபார்த்து வழங்குதல் |
| | | சேதமடைந்த வலை | ஒரு மீனவருக்கு அதிகபட்சமாக 5 வலை என்ற அடிப்படையில் சேதமான வலைக்கு ரூ. 15,000/- (அதிகபட்சமாக ரூ. 75,000/-) உதவித்தொகை. |
| 11 | அனர்த்தத்தினால் சேதமடைந்த நிரந்தர வணிகக் கட்டிடங்களுக்காக வணிக வளாகத்தை மீட்டெடுப்பதற்காக ஒரு வணிகக் கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்படும் உதவித்தொகை. | | |
| | 11.1 | சேத மதிப்பீடு இல்லாமல் இழப்பீடு பெற விருப்பம் தெரிவிக்கும் வணிக கட்டிட உரிமையாளருக்கு செலுத்தப்படும் கொடுப்பனவு | வணிக உரிமையாளர் ஒருவருக்கு ரூ. 500,000/- ஆகும் |

| 08/2025 சுற்றறிக்கை நிரலின் தொடர் இல. | | உத்தேச முன்மொழிவு | கொடுப்பனவு |
|---|---|---|---|
| | 11.2 | சேத மதிப்பீட்டிற்குப் பிறகு இழப்பீடு பெற விருப்பம் தெரிவிக்கும் வணிக கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு. | மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் ஒரு வணிக உரிமையாளருக்கு வழங்கப்படும் அதிகபட்ச கொடுப்பனவு ரூ. 5,000,000/- ஆகும். |
| 12 | | அனர்த்தத்தினால் **முற்றிலுமாக சேதமடைந்த அல்லது மண்சரிவு அபாயம் காரணமாக வசிக்கத் தகுதியற்றதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு** புதிய வீடு கட்ட மானியம் வழங்கப்படுகிறது. | குடியிருப்பு வீட்டிற்கு வீட்டு உரிமையாளருக்கு ரூ. 5,000,000/-. |
| 14 | | அனர்த்தத்தினால் பகுதியளவு சேதமடைந்த வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக வீட்டு உரிமையாளருக்கு ரூ. 2,500,000/- வரை உதவித்தொகை வழங்கல். | |
| | 14.1 | சேத மதிப்பீடு இல்லாமல் இழப்பீடு பெற விருப்பம் தெரிவிக்கும் வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்படும் தொகை. | வீட்டு உரிமையாளருக்கு ரூ. 500,000/- |
| | 14.2 | சேத மதிப்பீட்டிற்குப் பிறகு இழப்பீடு பெற விருப்பம் தெரிவிக்கும் வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்படும் தொகை. | மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் ஒரு வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்படும் அதிகபட்ச இழப்பீடு ரூ. 2,500,000/- ஆகும். |

03. அனர்த்தத்தினால் சேதமடைந்த மத ஸ்தலங்களை சுத்தம் செய்தல் மற்றும் மறுசீரமைப்பு செய்வதற்கான ரூ. 25,000/- ஒரு முறைக் கொடுப்பனவு சமய விவகாரங்கள் தொடர்பான திணைக்களங்களினால் வழங்கப்படும் பரிந்துரைகளின்படி புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் செயற்படுத்தப்படும்.

04. இந்த வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதில் பொருத்தமான வழிகாட்டுதல்களை தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வெளியிடும்.

05. வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இல. 08/2025 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் எவ்வித மாற்றமுமின்றி இருக்கும்.

**ஒப்பம்/-**
**ஏ.என். ஹபுகல**
திறைசேரியின்செயலாளர் (பதில் கடமை)

பிரதி:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்